# இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்!

## கவிப்பேரரசு வைரமுத்து வாழ்த்து!



இணையில்லா
இணையர் நீங்கள்

நல்ல தம்பதிகள் நாட்டுக்கு
எடுத்துக்காட்டு

சொல்லுக்குள் உறையும்
பொருளைப் பிரிக்கமுடியுமா?
உங்கள் உறவும் அப்படித்தான்!

வான்விட்டு நீலத்தை
வடிக்க முடியுமா?
உங்கள் வாழ்வியல்
நெருக்கம் அப்படித்தான்

சுழற்றியடித்த புயல்
சுண்டியெறிந்த மழை
கண்ணைப் பறிக்கும் மின்னல்
காது பிளக்கும் இடி
அத்தனையும் தாண்டி
ஏரி நீரில் படகுமேல்
ஏறிச் செல்வது போல்
இயல்பாய் வாழ்கிறீர்கள்!

வள்ளுவர் பாடிய வாழ்வியல் இணையரே
வாழிய பல்லாண்டு!

அரை நூற்றாண்டு கண்டீரே
இன்னும் ஒரு நூற்றாண்டு
காண்பீரே

தமிழ்நாடும் வாழ்கிறது
உங்கள் வாழ்வோடு!



கவிப்பேரரசு வைரமுத்து

### மாற்றுத் திறனாளிகளுக்கான

# வேலை வாய்ப்புக்கு ஒன்றிய அரசு செய்தது என்ன?

## மக்களவையில் – கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, ஆக. 22 -

மாற்றுத்திறனாளிகளுக்கான திறன் மேம்பாடு- வேலைவாய்ப்புகள் குறித்து திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி மக்களவையில் 19.8.2025 அன்று எழுத்துபூர்வமாக கேள்விகளை எழுப்பினார்.

அக்கேள்விகள் வருமாறு:

“மாற்றுத்திறனாளிகளின் திறன் மேம்பாட்டுக்கான தேசிய செயல் திட்டத்தின் விவரங்கள் (NAP-SDP) என்ன? இத்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் முக்கிய கூறுகள் யாவை?

இந்தத் திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கான தொழில் பயிற்சி மையங்களை அரசாங்கம் நிறுவியுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள், தமிழ்நாடு உட்பட மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்கள் வாரியாக என்ன?

மாற்றுத் திறனாளிகளுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொழில் பயிற்சியை முடித்த பிறகு,



மாற்றுத்திறனாளிகள் அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலை வாய்ப்பைப் பெறுவதை உறுதி செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

இந்தத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற மாற்றுத்திறனாளிகளை பணியமர்த்துவதில் தனியார் துறை பங்கேற்பை ஊக்குவிக்க ஏதேனும் சிறப்பு சலுகைகள் அல்லது திட்டங்கள் உள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?” கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்விகளை எழுப்பினார்.

இக்கேள்விகளுக்கு ஒன்றிய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணையமைச்சர் பி.எல். வர்மா அளித்த பதில் வருமாறு:

“சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்துக்கு உட்பட்ட மாற்றுத்திறனாளிகள் அதிகாரமளித்தல் துறை யானது.

மாற்றுத்திறனாளிகளின் திறன் மேம்பாட்டுக்கான தேசிய செயல் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. மாற்றுத்திறனாளிகளின் திறன்களை மேம்படுத்தி அவர்கள் அதிக வேலைவாய்ப்பைப் பெறுதல் மற்றும் தன்னம்பிக்கையோடும் உற்பத்தித் திறனோடும் இந்த சமூகத்துக்கு பங்களிப்பு செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்த தேசிய செயல் திட்டத்தை அரசு செயல்படுத்துகிறது.

இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் உள்ள பல்வேறு அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பொதுவான திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி மேற்கண்ட பயிற்சித் திட்டங்களுக்கு நிதியளிக்கப்படுகிறது. இது அவ்வப்போது அமைச்சகத்தால் தேவைக்கேற்ப திருத்தியமைக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் படி 15-59 வயதுக்குட்பட்ட குறைந்தது 40% மாற்றுத்திறன் கொண்ட மாற்றுத் திறனாளிகள் பயிற்சி பெற தகுதியுடையவர்கள். மாற்றுத் திறனாளிகள் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், வேலை வாய்ப்பும் பெறுவதை நோக்கமாகக் கொண்டு https://pmdaksh.depwd.gov.in/login என்ற வலைத் தளத்தில் ‘திவ்யாங்ஜன் ரோஸ்கர் சேது’ என்ற பிரத்யேக தொகுதி உள்ளது.

இது மாற்றுத் திறனாளிகளுக்கும் மாற்றுத் திறனாளிகளை பணியமர்த்தும் பல்வேறு நிறுவனங்களுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்படுகிறது. நாடு முழுவதும் உள்ள தனியார் நிறுவனங்களில் கிடைக்கும் வேலைவாய்ப்பு/வருவாய் வாய்ப்புகள் குறித்த பகுதி சார்ந்த தகவல்களை இந்த தளம் வழங்குகிறது. பதிவு செய்யப்பட்ட மாற்றுத் திறனாளிகள் வேலை வாய்ப்பு பெறுவதற்காக இது செயல்படுத்தப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

### சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமுறையில்

# தமிழ்நாட்டின் நிதி ஆதாரத்தினை பாதுகாக்க வேண்டும்!

## புதுடெல்லியில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக. 22-

புது தில்லியில் 20.08.2025 அன்று நடைபெற்ற ஆயுள் மற்றும் சுகாதார காப்பீட்டிற்கான அமைச்சர்கள் குழுக் கூட்டம் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீட்டு மேல்வரியினை மறுஉருவாக்கம் செய்வதற்கான அமைச்சர்கள் குழுக் கூட்டத்தில், தமிழ்நாடு நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்று சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமுறையில் தமிழ்நாட்டின் நிதி ஆதாரத்தினை பாதுகாக்க வேண்டி விரிவாக வலியுறுத்தினார்கள்



சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதங்களை சீரமைக்கும் முனைவுகள் வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில், மாநிலங்களின் நிதி ஆதாரங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். தமிழ்நாடு உட்பட பல மாநிலங்கள் பெரும் உள்கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் சமூக நலத்திட்டங்களை செயல்படுத்தி வரும் நிலையில், இதற்கான செலவினங்களைக் குறைக்கும் வகையில் வரிசீரமைப்பு வழிவகுக்கக்கூடாது. குறிப்பாக சமூக நலத்துறையில், தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் சுகாதாரம் மற்றும் கல்வியில் முதலீடு செய்வதன் மூலம் முழு மனித ஆற்றலையும் அடைவதற்கான வழியைக் காட்டுகின்றன. எனவே ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் மேற்கொள்ளும் வரிசீரமைப்பு முனைவுகள் ஒவ்வொரு மாநிலத்தின் வருவாயை பாதுகாக்கும் விதமாக அமைந்திட வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

**மாநிலத்தில் வருவாயை பாதிக்கும் வரி சீரமைப்பு!**

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதங்களை சீரமைக்கும், தருணத்தில் இழப்பீட்டு மேல்வரியும் முடிவுக்கு வரவுள்ளது. ஒரே நேரத்தில், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதக் குறைப்பு மற்றும் இழப்பீட்டு மேல்வரியினை நீக்குவது ஆகியன மாநிலத்தின் வருவாயை கணிசமாக பாதிக்கும்.

எனவே, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகித மறுசீரமைப்பு காரணமாக மாநிலங்களுக்கு ஏற்படக்கூடிய வருவாய் இழப்பை ஈடுசெய்ய இழப்பீட்டு மேல்வரியினை நீட்டிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

**மாற்று வழி முறையை செயல்படுத்த வேண்டும்!**

தற்போது மேல்வரி விதிக்கப்பட்டு வரும் பொருட்கள் மீது, இழப்பீட்டு மேல்வரியினை தொடர இயலாத நிலையில், மாநிலங்களுக்கு ஏற்படக்கூடிய வருவாய் இழப்பை குறைப்பதற்கு, மாற்று வழிமுறை செய்யப்பட வேண்டும் என அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இழப்பீட்டு மேல்வரியினை 4 முதல் 6 ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு வருவாய் இழப்பை ஈடுசெய்ய மாநிலங்களுக்கு மட்டும் முழுமையாக பயன்படுத்த வேண்டும் என்றும் உடனடி தீர்வாக மாநிலங்களின் நிகர கடன் உச்சவரம்பை மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவிகிதமாக எவ்வித நிபந்தனையும் இல்லாமல் உயர்த்தப்பட வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

**தேவையான ஒத்துழைப்பை தமிழ்நாடு அரசு வழங்கும்!**

மாநில வருவாய் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதனை கருத்தில் கொண்டு, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதத்தை மறுசீரமைப்பதில் தேவையான ஒத்துழைப்பை தமிழ்நாடு அரசு வழங்கும் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்கள்.

### தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியம் – கோதை நாச்சியாபுரம், பருவக்குடியில்

# ரூ.33.35 கோடி மதிப்பில் திட்டப் பணிகள்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் துவக்கி வைத்தார்! ஈ.ராஜா எம்.எல்.ஏ. முன்னிலை!

தென்காசி.ஆக.22–

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கோதை நாச்சியார்புரம் கிராமம் பருவக்குடி கிராம ஊராட்சியில் (20.08.2025) அன்று மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பங்கேற்று ரூ.33.35 கோடி மதிப்பீட்டில் பல்வேறு துறைகளின் மூலம் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து அடிக்கல் நாட்டி,நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் கே.கே. எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்த தாவது.

திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு எண்ணற்ற திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். கடந்த மாதங்களில் மட்டும் ‘உங்களுடன் ஸ்டாலின்’ ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ ‘முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்’ உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி மக்களை பாதுகாக்கின்ற அரசாக இந்த அரசு உள்ளது. தென்காசி மாவட்டத்திற்கென நலத்திட்ட உதவிகள் மற்றும் பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**பல்வேறு நலத்திட்ட பணிகளுக்கு அடிக்கல்!**

அதனடிப்படையில் இன்றைய தினம் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் மற்றும் மேலநீலிதநல்லூர் ஆகிய வட்டாரங்களில் ரூ.1.03 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளிக்கூட வகுப்பறை கட்டிடங்கள் மாணவ,மாணவியர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், தென்காசி மாவட்டம் புளியரை அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் 06 கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கும், சீவநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் 06 கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கும்,மேலப்பாவூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.1.37 கோடி மதிப்பீட்டில் 04 கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கும்,ரூ.98.96 இலட்சம் மதிப்பீட்டில் 04 கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கும்,சாயமலை அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.98.96 இலட்சம் மதிப்பீட்டில் 04 கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கும்,ஆவுடையானூர் பி.ஏ.பி.என் அரசு மேல்நிலைப்பள்ளி யில் 03 கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கும், வேதம்புதூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் ரூ.49.48 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதலாக 2 வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கும்,சுற்றுலா துறையின் சார்பில் கீழப்பாவூர் பெரிய குளத்தில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் படகு குழாம் அமைப்பதற்கும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

**5 பயனாளிகளுக்கு இலவச தையல் இயந்திரங்கள்!**

வருவாய்த்துறையின் மூலம் வீடற்ற 1586 பயனாளிகளுக்கு சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் ரூ.8.23 கோடி மதிப்பீட்டிலான வீட்டுமனைப் பட்டாக்களும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மகளிர் திட்டத்தின் மூலம் 100 பயனாளிகளுக்கு ரூ.5.00 கோடி மதிப்பீட்டிலான கடன் உதவிகளும், முன்னாள் படைவீரர் நலன் அலுவலகத்தின் மூலம் முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் 14 பயனாளிகளுக்கு ரூ.1.96 கோடி மதிப்பீட்டிலான கடனுதவிகளும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 05 பயனாளிகளுக்கு ரூ.33,000 ம் மதிப்பீட்டிலான இலவச தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள் ளது.

இவ்வாறு அமைச்சர் கே.கே. எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு.தண்டபாணி, சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் ஜெ. கவிதா, ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள் லாலா பி.சங்கரபாண்டியன் (சங்கரன்கோவில்) பொன். முத்தையா பாண்டியன் (வாசுதேவநல்லூர்) கீழப்பாவூர் பேரூராட்சி தலைவர் பி.எம்.ராஜன், சங்கரன்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அருள்செல்வம், மல்லிகா, சங்கரன்கோவில் வட்டாட்சியர் பரமசிவம், செயற்பொறியாளர் (கட்டிடம் மற்றும் பராமரிப்பு) அனிட்டா சாந்தி, உதவி செயற்பொறியாளர் ஜான் ஆசிர், உதவி பொறியாளர் அசோக், உதவி பொறியாளர் (ஊரக வளர்ச்சித் துறை) செண்பகக்கனி,மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### எம்.எட். (M.Ed.) மாணாக்கர் சேர்க்கைக்கான

# இணையதள விண்ணப்பப் பதிவு நீட்டிப்பு!

## உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தகவல்!

*சென்னை, ஆக.22-*

*2025-26ஆம் கல்வியாண்டிற்கான அரசு கல்வியியல் கல்லூரிகளில் எம்.எட் (M.Ed.) மாணாக்கர் சேர்க்கைகான இணையதள விண்ணப்பப் பதிவு 11.08.2025 அன்று முதல் தொடங்கி நேற்று முன்தினத்துடன் (20.08.2025) முடிவடைந்தது. இந்த கால அவகாசம் 15.09.2025 வரை நீட்டிக்கப் படுவதாக உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளதாவது:-*

*தமிழ்நாட்டில் எம்.எட். பாடப்பிரிவுகள் கொண்டுள்ள 6 அரசு கல்வியியல் கல்லூரிகளில் 300 இடங்கள் உள்ளன. இவ்விடங்களுக்கு 2025-26ஆம் கல்வியாண்டில் மாணாக்கர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் 11.08.2025 முதல் தொடங்கப்பட்டது. மாணாக்கர்கள் www.tngasa.in என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பப் பதிவினை மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி விண்ணப்பப் பதிவு இன்றுடன் முடிவடைகிறது. விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தரவரிசையின் படி 26.08.2025 முதல் கல்லூரிகளில் மாணாக்கர் சேர்க்கை தொடங்கும். இதன் விவரம் SMS மற்றும் e-mail மூலம் மாணாக்கர்களுக்கு அனுப்பப்படும். முதலாம் ஆண்டு வகுப்புகள் 01.09.2025 அன்று முதல் தொடங்கும்.*

*எம்.எட். சேர்க்கைகான விண்ணப்பிக்கத் தவறிய மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க 21.08.2025 முதல் www.tngasa.in என்ற இணையதளம் வாயிலாக தொடர்ந்து விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தில் 15.09.2025 வரை மாணாக்கர்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம்.*

*இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.*

### தமிழ்நாடு அரசின் “முதல்வரின் காக்கும் கரங்கள்” திட்டத்தின் கீழ்

# முன்னாள் படைவீரர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருவாரூர்,ஆக. 22–

தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னையிலிருந்து காணொளி காட்சி வாயிலாக முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் ”முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தினைத் தொடங்கி வைத்ததனைத் தொடர்ந்து, திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட திருமஞ்சன வீதி நகரத்தார் இல்லத்தில் முன்னாள் படை வீரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச் சந்திரன் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

முன்னாள் படைவீரர்கள் தொழில் தொடங்கி தங்கள் வாழ்வை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்ட ‘முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் முன்னாள் படைவீரர்கள் தொழில் தொடங்க ஒரு கோடி ரூபாய் வரை வங்கிகள் மூலம் கடன் பெறுவதற்கு வழிவகை செய்யப்படுகிறது.

மேலும், கடன் தொகை யில் 30 விழுக்காடு மூலதன மானியமும் 3 விழுக்காடு வட்டி மானியமும் வழங்கப்படும், இவர்களுக்குத் திறன் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி போன்ற தேவையான பயிற்சிகளும் அரசால் வழங்கப்படுகிறது. இராணுவப் பணியின்போது உயிரிழந்த படைவீரர்களின் கைம்பெண்களும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறலாம்.

இந்த நிகழ்ச்சியில் 2 முன்னாள் படைவீரர் களுக்கு ரூ.4 லட்சத்து 32 ஆயிரத்து 327 மதிப்பில் முதலீட்டு மானியத் தொகை யினை சட்டமன்ற உறுப்பி னர் பூண்டி.கே.கலைவாணன் மாவட்ட ஆட்சித் தலைவர் மோகனச் சந்திரன் ஆகியோர் வழங்கினர்.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கோதை நாச்சியாபுரம் கிராமம் பருவக்குடி கிராம ஊராட்சியில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தலைமையில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பங்கேற்று ரூபாய் 33.35 கோடி மதிப்பீட்டில் பல்வேறு துறைகளில் மூலம் முடிவுற்ற திட்டபணிகள் துவக்கி வைத்து புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன்,திட்ட இயக்குனர் தண்டபாணி,வருவாய் கோட்டாட்சியர் கவிதா, ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்கள் லாலா சங்கரபாண்டியன், பொன்.முத்தையாபாண்டியன் உள்பட பலர் உள்ளனர்.



நாசரேத் பேரூராட்சி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூ.15,00,000 மதிப்பீட்டில் வார்டு2 CSI சர்ச் முன்பு பேவர்பிளாக் சாலை பணிகள், நாசரேத் பேரூராட்சி பெத்தானியா நகரில் பேவர்பிளாக் சாலைபணியை மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்துவக்கிவைத்தார். உடன் தி.மு.க. மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் செயலாளர் எஸ்.ஆர். எஸ்.உமரிசங்கர், மாவட்ட இளைஞரணிஅமைப்பாளர்பை.மூ. ராமஜெயம், மாநில செயற்குழு உறுப்பினர் ஜெகன், நாசரேத் பேரூராட்சி தலைவர் நிர்மலா ரவி, ஒன்றிய செயலாளர் நவீன்குமார், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வகுமார், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.